1978 மார்ச் 28]

திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் தன்னுடைய பதிலுரையில் அத்தகைய மருத்துவமனைகள் நான்கு இடங்களில் இருப்பதாகவும் அவற்றில் ஒன்று கே. கே. நகரில் இருப்பதாகவும் குறிப்பிட்டார்கள். கே.கே. நகர் என்றால் என்ன என்பதற்கான விளக்கத்தை மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, கலைஞர் கருணாநிதி நகர் என்று மன மகிழ்வோடு சொல்லுகிறேன்.

விரைவுப் பேருந்துகளில் புகார் புத்தகம்.

*694 வினா திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு போக்குவரத்துதுறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் ஓடும் நெடுந்தூர விரைவு வண்டிகளில் பயணிகள் புகார் எதையும், Suggestion சொல்லவும் Complaint Books வைக்கப்பட்டுள்ளனவா?

(ஆ) இல்லையெனில், அவ்வாறு வைக்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) தமிழ்நாட்டில் ஓடும் அனைத்து நெடுந்தூர விரைவு வண்டிகளிலும் பயணிகள் புகார் எழுதவும், ஆலோசனைகள் குறிக்கவும் புகார் புத்தகங்கள் வைக்கப்பட்டுள்ளன.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. துரை முத்துசாமி : தமிழ்ச் சமுதாயத்திற்காகப் பாடுபட்ட அண்ணா, பெரியார் போன்றவர்கள் பெயர்களில், அரசர்கள் பெயர்களிலும் இங்கே போக்குவரத்துக் கழகங்கள் அமைக்கப்பட்டிருப்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறேன், பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல் இந்தக் கழகங்கள் எல்லாம் ஒன்றாக இணைக்கப்படாதது என்று நேற்றையதினம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதேபோல் தமிழ்ச் சமுதாயத்திற்குப் பாடுபட்ட மறைந்த பெரும் தலைவர் காமராஜ் அவர்கள் பெயரில் ஒரு போக்குவரத்துக் கழகம் அமைக்க பொதுமக்களிடமிருந்து வேண்டுகோள் அல்லது கோரிக்கை ஏதாவது வந்ததா? அப்படி அமைக்கிற திட்டம் இந்த அரசிடம் உண்டா என்று அறியவிரும்புகிறேன்.

1978 மார்ச் 28

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மூல வினாவிற்கும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியுள்ள துணை வினாவிற்கும் தொடர்பில்லை என்றாலும், போக்குவரத்துக் கழகம் ஏதேனும் ஒன்று மேலும் அமைக்கப்படுமேயானால், கோரிக்கை எதுவும் வராவிட்டாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளை கோரிக்கையாக ஏற்று அதுவும் பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : பாஸஞ்சேர்ஸ் க்ரீவன்ஸ் சம்மந்தமாக பாஸஞ்சேர்ஸ் கம்ப்ளெயின்ட் புக்கில் எழுதினாலும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்ற நம்பிக்கை இல்லை. நீண்ட கால பழக்கத்தை வைத்துச்சொல்கிறேன். இந்த அரசு வந்த பிறகு உள்ளதைச் சொல்லவில்லை. ஆகவே நான் சொல்லவிரும்புவது, கம்ப்ளெயின்ட் புக்கில் எழுதினால் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற நம்பிக்கை ஏற்படுவதாக இருந்தால் அதைப்பற்றி ஸீரியஸாக எழுதுவார்கள். அதற்கான ப்ரோஸீஜர் என்ன? புக்கில் எழுதினாலும் அதிகாரிகளால் அது "இக்னோர்" செய்யப்படுகிறது என்ற நிலைதான் இருக்கிறது பாஸஞ்சர்களுக்கு புகார் எழுதியதுபற்றி பதில் வருவதில்லை. ஆகவே ஸிம்பல்டேனியஸாக டாப்அபிஷியல்ஸ் இடமிருந்து பதில் கிடைக்க என்ன ப்ரோஸீஜர் பாலோ செய்ய இருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : புகார், ஆலோசனைப் புத்தகத்தில் எழுதப்படுகிற புகார்கள், ஆலோசனைகள் உடனடியாக தினம் தலைமை அலுவலகத்திற்குக் கொண்டுவரப்பட்டு சம்மந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க அனுப்பப்படுகிறது. தக்க நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுவருகிறது. ஆனால் பொதுமக்கள் புகார்களை அந்தப் புகார் புத்தகத்தில் எழுதுவதற்கு பெருவாரியாக முன்வராத நிலைஇருந்துகொண்டிருக்கிறது என்பதை நான் கண்ணுற்றிருக்கிறேன். பொதுமக்கள் முன்வந்து பேருந்துகளில் இருக்கிற குறைபாடுகளாக இருந்தாலும் சரி அல்லது ஒட்டுநர் அல்லது நடத்துனர் இவர்களால் ஏற்படுகிற குறைபாடுகளாக இருந்தாலும்சரி புகார் புத்தகங்களில் குறிக்க முன்வரவேண்டும் என்பதை இந்த அவைமூலம் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : நடப்பாண்டில் எவ்வளவு பேருந்துகளில் புகார்கள் செய்யப்பட்டிருக்கின்றன? எவ்வளவு புகார்களின் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அதுபற்றி தனிக் குறிப்பு இல்லை. பிறகு கூறுகிறேன்.

[1978 மார்ச் 28]

திரு. சோ. அழகர்சாமி : இந்தப் புகார் புத்தகத்தில் எழுதக்கூடிய புகார்கள் சம்மந்தமாக நடவடிக்கைகள் எடுக்கப் படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் திருச்சி பேருந்து நிலையத்தில் ஒரு புகார் புத்தகத்தில் எழுதி யிருந்தேன். அதற்கு, அதன்மேல் என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது என்று இதுவரையில் தெரியவில்லை. எனக்கு அதுபற்றி தகவல் வரவவில்லை. பொதுமக்களால் எழுதப்படுகிற புகார் களுக்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்ற விவரத்தை அவர்களுக்கு எழுதுவதோடுகூட உடனடியாக இது சம்மந்தமான நடவடிக்கைகள் எடுக்க என்ன அமைப்புகள் ஏற்படுத்தப்பட இருக்கின்றன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் ஆலோசனை நல்ல ஆலோசனை. புகார் எழுதுகிற பொதுமக்களுக்கு, நடவடிக்கைகள் குறித்து உடனுக் குடன் தகவல் அனுப்புகிற முறை கடைப்பிடிக்கப்படும்.

பேருந்துகளில் மாணவர்களுக்கு சலுகைக்கட்டணங்கள்.

*695 வினா—திரு. கு. ரமணி : மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) மாணவர்களுக்கு பஸ் கட்டண சலுகை அளிக்கப்பட்டதால் சென்னை நகரில் மட்டும் அரசுக்கு ஏற்படும் இழப்பு எவ்வளவு?

(ஆ) மாவட்டங்களுக்கும் இதை விஸ்தரித்தால் மேலும் எவ்வளவு இழப்பு ஏற்படும்?

(இ) சென்னை நகரில் பஸ் போக்குவரத்து ஊழியர்களின் குழந்தைகளுக்கு பஸ் கட்டண சலுகை அளித்ததால் ஏற்பட்டுள்ள இழப்பென்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) நடப்பு பள்ளி ஆண்டில் அதாவது ஜூலை— ஆகஸ்டு 1977 முதல் மார்ச்—ஏப்ரல் 1978 முடிய ஏற்படும் இழப்பு ரூ. 1,62,27,687.05 ஆகும்.

(ஆ) இச்சலுகையினை மாவட்டத்திலுள்ள எத்தனை மாணவர்கள் பயன்படுத்துவர் என துல்லியமாக நிர்ணயிக்க வாய்ப்பில்லாத போதும் சென்னை நீங்கலான அனைத்து